Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 | ஈரோடு, 14-4-1945 சித்திரை-மீ 2உ | இதழ் 27

## மதப் போட்டி

(சித்திரபுத்திரன்)

### யாரைப் பார்த்து யார் காப்பியடித்தார்?

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாக வேண்டும்; மோட்சம், நரகம் இருந்தாக வேண்டும்; கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாக வேண்டும்.

இவை இல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்க முடியாது. இந்து மதத்துக்கோ இவைகள் மாத்திரம் போதாது, அதாவது பல கடவுள்கள் வேண்டும்; பலவிதமான மோக்ஷங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும்; மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்பின் ஜன்மங்கள் வேண்டும்; பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும்; இவ்வளவும் போதாமல் கடவுளை நேரில் கண்டு மோக்ஷத்திற்குப் போன பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இந்தக் காரியங்கள் சிறப்பாக இந்து மதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டு உட்பிரிவு மதங்களுக்கும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொருத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய காரியங்களைப் பொருத்த வரையில் ஏறக்குறைய ஒருவரைப்பார்த்து ஒருவர் காப்பியடித்தது போலவே தான் இருக்கிறது.

உதாரணமாக வைணவத்தில் ராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவும் அவரது மனைவியாகிய லட்சுமியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது என்றால் சைவத்துக்கு கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது.

எப்படியெனில் விஷ்ணுவும் லட்சுமியும் பகல் நேரத்தில் கலவியில் இருந்தபோது சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக் காண ஆசைப்பட்டதாகவும் துவாரபாலகர்கள் தடுத்ததாகவும் அதற்கு அவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச் சாபம் தீர வேண்டியதற்காகவே ராமாயணம் முதலியவை ஏற்பட வேண்டியதாயிற்றாம்.

அதுபோலவே பரமசிவன் பார்வதியோடு பல நூறு வருஷங்கள் விடாமல் கலவி செய்து கொண்டு இருந்ததாகவும் அதனால் ஏற்படும் வீரியமும், கர்ப்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக் கூடியதாகிவிடும் என்று, தேவர்கள் முறையிட கலவி முற்றுப் பெறுவதற்கு முன்பாகவே கலவியை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகி அதனால் இந்திரியம் நிலத்தில் விழுந்து சிறுது என்னென்னவோ ஆபாசமாகி வடிவமாக சுப்பிரமணியர் தோன்றி கந்தபுராணம் ஏற்படவேண்டியதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும் பூபாரம் தீர்க்கவும், ராக்ஷதர்களை அழிக்கவும் விஷ்ணு ராமராய்த்தோன்றினார்.

அதுபோலவே பூபாரம் தீர்க்கவும் அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

ராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்.

சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

ராமன் ராக்ஷதர்கள் என்பவர்களைக் கொன்றான்.

சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக் கொன்றான்.

ராமன் ராக்ஷதர்களைக் கொல்லும்போது (மூலபலம்) கொல்லக் கொல்ல உற்பத்தியாகிக்கொண்டே வந்தன.

சுப்பிரமணியன் அசுரர்களைக் கொல்லும்போது கொல்லக்கொல்ல அசுரர்கள் தலைகள் முளைத்துக் கொண்டே வந்தன.

ராமன் பெண்ஜாதி சீதை ஒரு வளர்ப்புப்பெண். சமுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டவள்.

சுப்பிரமணியன் பெண்ஜாதியும் ஒரு வளர்ப்புப் பெண். வள்ளிச் செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் இனியும் அனேக விஷயங்களில் கடவுள்களைப் பற்றிய கதைப் பொருத்தங்கள் காணலாம்.

அதுபோல சைவவைணவ ஆச்சாரியார்கள் விஷயங்களிலும், சைவத்துக்கு நாயன்மார்களாகவும் வைணவத்துக்கு ஆழ்வார்களாகவும், ஏற்படுத்தப்பட்டிருப்ப

தோடல்லாமல் பல பக்தர்களையும் அவர்கள் செய்த காரியங்கள் அதன் பயனாய் அவர்கள் அடைந்த முக்திகள், ஆகிய விஷயங்களிலும் ஒன்று போலவே கதைகள் கற்பிக்கப்பட்டிருப்பதையும், காணலாம்.

வைணவ பக்தர்கள் விஷயத்துக்கு பக்த லீலாமிருதம் என்னும் புத்தகம்போலவே சைவ பக்தர்கள் விஷயத்துக்கு பெரியபுராணம் என்னும் புத்தகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால் சைவ பக்தரிலும், ஒரு குயவர் இருக்கிறார்.

எப்படி எனில் வைணவக்குயவர் கோராகும்பராய் இருந்தால் சைவக்குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார்.

இருகுயவ பக்தர்களுடைய கதையும் ஒன்றுபோலவே அதாவது கோராகும்பாரும் தன் பெண்ஜாதியுடன் பேசாமல் இருந்து கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்துவைக்கிறார்.

திருநீலகண்ட குயவனாரும் தன் பெண்ஜாதியோடு பேசாமல் இருந்து கடைசியாக சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்துவைக்கிறார்.

மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்கு சோக்கமாலா என்கின்ற தீண்டாத ஜாதி பக்தர் ஒருவர் இருந்து அவரைக் கோவிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டு கனவுகண்டு கடைசியாக விஷ்ணு வந்து அழைத்துப்போகிறார்.

சைவத்திலும் தீண்டப்படாத வகுப்புக்கு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து பரமசிவன் வந்து கனவில் சொல்லி சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டுமத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதிரியான உயர்வும் மற்றவர்களுக்கு இழிவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு ஜாதி பாகுபாடுகளைப் பற்றி ஒரே மாதிரியாகவே குறிப்பிட்டு பலப்படுத்தி இருக்கிறது

இவற்றுள் சைவத்தைப் பார்த்து வைணவர்கள் காப்பி அடித்தார்களா? அல்லது வைணவர்களைப் பார்த்து சைவர்கள் காப்பி அடித்தார்களா? என்பது ஒரு ஆராய்ச்சி வேலையாய் இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ் நாட்டில்தான் சைவத்தைப்பற்றி பிரபலமாய் பேசப்படுகின்றதே ஒழிய மற்றபடி இந்தியாவின் வடபாகம் முழுவதும் ஆந்திரதேசம் உள்பட வைணவமே மேலோங்கி இருக்கிறது. வடநாட்டில் வைணவம் என்றால்தான் மாம்சம் சாப்பிடாதவர் என்று அர்த்தமாகும்.

ஆகையால் இவை இரண்டிற்கும் மதக்கிரந்தங்கள், மதக் கதைகள் மத பக்தர்கள் மதக்கடவுள்கள் என்பவைகளில் ஒன்றை ஒன்று காப்பி அடிப்பதோ அல்லது இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப்பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப்பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

# வருகின்றார்!

(எஸ். கருணானந்தம்)

நாவற்ற உடல்நலியத் தொண்டை காய,
நல்வாழ்வை விட்டிந்த வேனில் நாளில்
மாவட்டந் தவறாமல் சுற்றிச் சுற்றி,
மாணவர்கள் பேசிவரப் போகின்றார்கள்;
கூவட்டும் ஆரியர்கள், கூடிக் கூடிக்
கொடுமையிது தருமாவென் றலறிப் பேசித்
தாவட்டும் பொறாமையினால் தலைகீழாகத்,
தாவிநமை என்செய்வார் இந்த நாளில்!
நாட்டுநிலை உணர்ந்துள்ள மாணவர்கள்
'நாம்சென்று நலிவுகளைத் தீர்ப்போம்' என்றார்;
கூட்டத்தில் பேசிடுவார் குளிரக் கேட்டுக்
குறிக்கோளைக் கொள்கைகளை புணர்ந்து கொள்வீர்
வீட்டுக்குள் வீணாக உறங்கிடாமல்
வெளிவந்து நாட்டுக்கு வேலை செய்தால்,
வாட்டமிகும் திராவிடரின் வறுமை நீங்கும்,
வாழ்க்கையிலே வளம்பெறுவார் உயர்வார் நன்றே!
வட்டியுடன் மேல்வட்டி சேரு மாவென்(று)
எண்ணுகிறார் வணிகர்கள் இரக்க மற்றார்;
பட்டத்தில் பதவிகளில் மோகங் கொண்டு
பதறுகிறார் 'பகதூர்'கள் 'சர்'கள் கூட்டம்;
சட்டத்தைச் சமயத்தை மீறோமென்று
சகதியிலே புரளுகிறார் சமயப் பித்தர்;
கெட்டுப்போய்க் கீழான இந்த நாட்டைக்
கிறுக்கர்கள் கருதவில்லை, கேடு காலம்!
இந் நிலையில் எழுந்திட்டார் மாணவர்கள்,
எடுத்தார்கள் பகுத்தறிவு வாளைக் கையில்,
'முன்னிற்போம் எதிர்த்திடுவோம் முறியடிப்போம்,
முட்டாள்கள் மூடர்கள் கூட்டந் தானை,
எம்நிலைமை யுணர்ந்திட்டோம் இனியெந் நாளும்
எம்கடனை மறவோ'மென் றுறுதி சொன்னார்;
அன்னவரை ஆதரிப்பீர் திராவிடர்காள்,
அருகினிலே திராவிடத்தின் உரிமை காண்போம்!

## விற்பனைக்கு

தர்மதீர சுவாமிகளால் எழுதப்பட்ட பகவத் கீதை ஆராய்ச்சி என்னும் நூல் நம்மிடம் விற்பனைக்குக் கிடைக்கும். கிரௌன் 1/8 சைஸ், 154 பக்கங்கள் கொண்ட, கீதையின் முரண்பாட்டை அணியுற விளக்கிக்காட்டும் சிறந்த நூல் ஒன்றின் விலை அணா 8. தனிப்பிரதி வேண்டுவோர் புக்போஸ்ட்டில் அனுப்ப பிரத்யேகமாக 0-1-3 அணா ஸ்டாம்பும், ரிஜிஸ்தர் புக்போஸ்ட்டில் அனுப்ப 0-4-3 ஸ்டாம்பும் அனுப்பவும்.

கிடைக்குமிடம்,
'குடி அரசு' பதிப்பகம்,
ஈரோடு.

## மறைவு

சென்னைத் தோழர் எம். ராம்மோஹன் அவர்கள் தந்தை தோழர் எம். சுந்தரம் நாயுடு அவர்கள் 8-4-45-ந் தேதி இயற்கையெய்தினார் என்பதை அறிய வருந்துகிறோம்.

ரோஜா முத்தையா

# பன்னீர்செல்வம் நாள்

## பெரியார் பேச்சு

மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் தமிழ் நாட்டிலுள்ள திருச்சி, தஞ்சை, கும்பகோணம் முதலிய பல இடங்களில் நடந்த பன்னீர்செல்வம் நினைவு நாள் கூட்டத்தில் பெரியார் பேசிய பேச்சுக்களின் தொகுப்பு.

தோழர்களே! பன்னீர்செல்வம் நினைவு நாள் என்று ஒரு நாளை நாம் கொண்டாடுகிறோம். எத்தனையோ பேர் தினம் சாகிறார்கள். ஏதோ இரண்டொருவர்களுக்குத்தான் நினைவு நாள் கொண்டாடுகிறோம். செத்துப்போனவர்களின் பணத்தை உத்தேசித்தோ, படிப்பை உத்தேசித்தோ, அதிகாரம், பட்டம், பதவி, அறிவு, சாமார்த்தியம் முதலியவைகளைப் பற்றியோ நாம் யாவருக்கும் நினைவு நாள் கொண்டாடுவதில்லை. இவைகள் காரணமாக நாம் எவரையும் போற்றுவதுமில்லை துதிப்பதுமில்லை.

பணத்தால் ஒரு மனிதனை மதிப்பதென்றால் ரிசர்வ் பாங்கியைத்தான் மதிக்கவேண்டும். படிப்பால் ஒரு மனிதனை மதிப்பதென்றால் பெரிய லைப்ரேரியைத்தான் மதிக்கவேண்டும், அறிவால் ஒருவனை மதிக்கவேண்டுமானால் என்சைக்ளோபீடியா, ரேடியோ முதலியவைகள் ஆகியவற்றை மதிக்கவேண்டும். இப்படியாக அனேகவற்றை ஜீவனில்லாதவைகளிலும் காணலாம். ஆதலால் நாம் மதிப்பது, பேசுவது, நினைவுறுவது என்பவையெல்லாம் இவைகளை உத்தேசித்தல்ல.

மற்றெதற்கு ஆக என்றால் மனிதர்களாக, மனிதத் தன்மை உடையவர்களாக இருந்து மறைந்த மனிதர்களுக்கு ஆக இரங்கி அவர்களது மனிதத் தன்மையை எடுத்துக் கூறி மற்றவர்களையும் மனிதர்களாக ஆகுங்கள் என்பதற்கு ஆகவே யாகும்.

அப்படியானால் செத்துப்போன மற்றவர்களும் இப்போது இருக்கும் மக்கள் எல்லோரும் மனிதர்கள் அல்லவா என்று கேட்பீர்கள். அவர்களையெல்லாம் மனிதர்கள் என்று சொல்லுகிறோமே ஒழிய மற்ற ஜீவப்பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் பேதம் காணக்கூடிய தன்மையுடைய மனிதர்கள் என்று சொல்வதற்குரியவர்களாகமாட்டார்கள். பேதம் என்றால் உருவபேதம் அல்ல, நடப்பிலும் நடப்பால் ஏற்படும் பயனிலும் உள்ள பேதமே யாகும்.

உலகிலுள்ள எல்லா ஜீவப் பிராணிகளுக்கும் மனிதர்கள் என்பவர்கள் உட்பட உருவத்தில் பேதம் இருந்தாலும் குணத்தில் பேதம் இருந்தாலும் நடப்பும் பயனும் [illegible]னைகமாய் ஒன்றுதான்.

### ஜீவன் என்றால்?

ஜீவன் என்றால் பிறத்தல், தன் நலனுக்காக வாழ்தல், இனத்தைப் பெருக்குதல், இறத்தல் ஆகியவைகளைக் கொண்டதேயாகும். இந்தத் தத்துவங்களைப் பார்த்தால் செத்த மனிதர்களும் இருக்கும் மனிதர்களும் முக்காலே மூன்று வீசம் முக்காணி அரைக்காணி பேரும் அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கை உடையவர்களும் மேற்கண்ட குணங்களுடைய ஜீவப்பிராணி என்பதில் சேர்ந்தவர்களாக ஆகாமல் அவைகளில் நின்றும் உயர்ந்தவர்களாகக் கருதப்படவேண்டிய மனிதத்தன்மை உடையவர்களாக இருக்க நியாயம் எங்கே இருக்கிறது?

ஜீவன் என்றால் சுய (Self) உணர்ச்சி என்றுதான் கருத்து. சுய உணர்ச்சி என்பது தன்னைப் பற்றிய, தன் வாழ்வைப் பற்றிய, தன் பாதுகாப்பைப் பற்றிய உணர்ச்சி என்பதாகத்தான் முடியும். இந்தத் தன்மையை உடையவர்களை ஜீவப் பிராணிகளில் நத்தை, சங்கு, ஈ, எறும்பு, பாம்பு, தேள், குயில், கழுகு, புலி, சிறுத்தை, குதிரை, யானை, ஆடு, மாடு, குரங்கு, மனிதன் என்பதாக மனிதனை மற்றவைகளோடு சேர்த்துச் சொல்லுவதற்கு அல்லாத தனிக் குணம் வேறு என்ன பெரும்பாலான மனிதர்களிடம் இருக்கிறது என்று கருதிப் பாருங்கள்.

மனிதனுக்கு ஆறு அறிவு இருக்கிறது என்று சொல்லுவது மனிதனை ஜீவப் பிராணிகளிடம் இருந்து பிரிப்பதற்கு போதுமான காரணமாகாது. சிந்திக்கிற குணம் எல்லா ஜீவப்பிராணிகளிடமும் இருக்கிறது. ஜீவத்தன்மை எந்தெந்த ஜீவனுக்கு இருக்கிறதோ அவற்றிற்கெல்லாம் சிந்திக்கும் தன்மை உண்டு. ஆனால் அதில் அளவு வித்தியாசம் இருக்கிறது என்பது உண்மை. அதனால் எதுவும் வேறுபட்ட உயர்ந்த ஜீவனாக ஆகிவிடாது. அதன் பலனாலும் ஏதும் உயர்ந்ததாக ஆகிவிடாது.

தேனீக்களால் மக்கள் தேன் சாப்பிடுகிறார்கள்; மாடுகளால் மக்கள் பால் சாப்பிடுகிறார்கள்; ஆடு, கோழிகளால் மக்கள் ஆகாரம் அடைகிறார்கள்; நாய்களால் காக்கப்படுகிறார்கள்; கழுதை, குதிரை முதலியவற்றால் பொதி சுமக்கவைத்தும் சவாரிசெய்தும் பயனடைகிறார்கள். இப்படி எத்தனையோவற்றால் எத்தனையோ பலன் அடைகிறார்கள். இவற்றால் இவை உயர்ந்த ஜீவனாகக் கருதப்படுகின்றனவா?, இல்லை. அப்படித்தான் மனித ஜீவனும் பல வழிகளில் பல காரணங்களால் வேறுபட்ட தன்மைகளால் ஒரு ஜீவனிடமிருந்து பிரிந்தானாகப்படலாமே ஒழிய உயர்ந்த ஜீவனாகிவிடமாட்டான்.

### எதனால் மனிதன் உயர்ந்தவன்?

மற்றபடி எதனால் மனிதன் மற்றஜீவப் பிராணிகளுடன் சேராத உயர்ந்தவனாகலாம் என்று கேட்கப்படலாம். அதைச் சொல்லத்தான் இவ்வளவு சொன்னேன்.

ஜீவசுபாவ உணர்ச்சியான தன்மை உணர்ச்சியும், தன்நல உணர்ச்சியும் உள்ள மனிதன் இவற்றை (தன்னலத்தை) அலட்சியம் செய்து,

அதாவது தன்னைப் பற்றிய கவலையும், தனது நலத்தையும், தன் மேன்மையைப் பற்றிய கவலையும், தனது மேல் வாழ்வின் தன்மை என்பதையும் அடியோடு மறந்து மனித சமுதாய வாழ்வின் மேன்மைக்கு ஆக பணியாற்றவே மற்ற ஜீவன்களுக்கு இருக்க முடியாத வசதி, எண்ணும் தன்மை, தொண்டாற்றும் சக்தி ஆகியவை இருக்கிறது என்று கருதி தன்னலத்தையும், தன் மானாபிமானத்தையும் விட்டு எவன் ஒருவன் தொண்டாற்றும் பணியை வாழ்வாகக் கொண்டிருக்கிறானோ அவன்தான் மற்ற ஜீவப்பிராணிகளில் இருந்து வேறுபட்ட மனிதத்தன்மை கொண்ட மனிதனாவான். மனித உருவ ஜீவப்பிராணி என்பதில் எந்த மனிதனை மதிப்பதானாலும், நினைவுநாள் கொண்டாடுவதானாலும், இந்தக் குணத்திற்கு ஆகத்தான் இருக்கலாமே ஒழிய வேறு ஒன்றுக்கும் ஆக இருக்க முடியாது.

ஒரு மனிதனுக்கு அழகும் மலமும் மூத்திரமும் உயர்ந்த நறுமணமுள்ளதாக இருந்தாலும் அதனால் மனிதன் மேன்மையானவனாகவோ, மதிக்கத்தகுந்தவனாகவோ ஆகிவிடமாட்டான். சிற்சில புல்பூண்டுகளுக்கு நறுமணம் உண்டு, சில ஜந்துக்களின் மலங்களுக்கு நறுமணமுண்டு. அவற்றை நாம் மதிக்கிறோமா போற்றுகிறோமா?

அரசர்களை மதிக்கிறோமா, பெரிய மனிதர்களை, ஆழ்வார்களை மதிக்கிறோமா, அல்லது தெய்வங்கள் என்பவர்களையாவது மதிக்கிறோமா? மகான்கள் அல்லது ஆச்சாரியார்களை மடாதிபதிகளை மதிக்கிறோமா? இவர்களையெல்லாம் அவரவர்களிடத்தில் சம்மந்தமும் தனிப்பட்ட நலமும் பெறுகிறவர்கள் தான் மதிப்பார்கள், மற்றவர்கள் ஏன் மதிப்பார்கள்? ஏன் என்றால் வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்பவனை யார் எதற்காக மதிப்பார்கள்? ஓட்டல்காரன் அன்னதானப் பிரபு ஆவானா? சம்பள உபாத்தியாயர் குருநாதனாவானா? தாசி காதலியாவாளா? என்பதுபோல் தான், தன் தன் நலத்துக்கு தன் தன் பொறுப்புக்கு ஆகக் காரியம் செய்யும் எவனுடைய காரியம் எப்படிப்பட்டதா

பினும் அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக்கூடியதாகாது. அப்படியல்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள் அதாவது தன்னைப் பற்றிய கவலை இல்லாமல் பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்து தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத்தொண்டால் பாதகமடையும் தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட வகுப்புகள், கும்பல்கள் மதிக்காமல் இருக்கலாம் அவமதிக்கலாம், அது பொதுவாய் மதிக்காததாகாது.

ஆகவே, நாம் நினைவு நாள் கொண்டாடும் மக்களை உண்மையான மனிதர்களாய்க் கருதி அவர்களது மனிதத் தன்மையை மதித்து மற்றவர்களும் அந்தத் தன்மைக்கு வரவேண்டும் என்கின்ற ஆசைக்காக, எடுத்துக் காட்டுக்காக, பிரசாரத்துக்காக கொண்டாடுகிறோம்.

## நம் பன்னீர்செல்வம்

நம் மறைந்த பன்னீர்செல்வம் அப்படிப்பட்ட கொண்டாடவேண்டிய குழுவில் சேர்க்கப்படவேண்டியவர் என்றே சொல்லலாம். அவர் நம் இனத்திற்குத் தன்னலமின்றி பல தொண்டாற்றினார். இன்னும் பல தொண்டாற்ற ஆவலாய் இருந்தார். அவர் நமக்காகத் தன்னை ஒப்படைத்தார்.

அவர் நம் இயக்கத்தில் ஒரு உண்மையான பின்பற்றுகிறவராக இருந்தார்; தலைவருக்கு அடங்கி இருப்பதுதான் ஒரு இயக்கத்துக்கு ஒரு கட்சிக்கு சரிமான கட்டுப்பாடு என்று பலதடவை பொது மேடைகளில் பேசி அதுபோல் நடந்து வந்தார்.

இன்று சிலர் தங்கள் கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்கு முறைக்கும் விரோதமாக நடந்து கொண்டு கட்சியில் கட்டுப்பாடு இல்லை என்றும் அதே சமயத்தில் தலைவர் சர்வாதிகாரியாய் இருந்து கட்டுப்பாட்டைக் குலைக்கிறார்கள் என்றும் பேசி கலவரம் செய்துவருவதைப் பார்க்கிறோம். அந்தக் குணம் நம் பன்னீர்செல்வத்தினிடம் இல்லை. சிலர் தலைவர் என்பதற்கும் சர்வாதிகாரம் என்பதற்கும் பொருள் விளங்காமல் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இயக்கம் அல்லது ஒரு ஸ்தாபனமாய் இருந்தால் அதில் உள்ள எல்லோருக்கும் தங்கள் இஷ்டப்படி பேசவும் நடக்கவும் உரிமை உண்டு என்பது பொருத்தமாகாது. "நீ சர்வாதிகாரம் செய்கிறாய்" என்று இங்கு (தஞ்சையில்) ஒரு சேன்வித்தான் எனக்குச் 'சொடுக்கிறார்கள். இதற்கு சமாதானம் சொல்லவேண்டியவனாய் இருக்கிறேன்.

இயக்கத்தின், ஸ்தாபனத்தின் கொள்கை, திட்டம் ஆகியவைகளைப் பற்றிச் சர்ச்சைசெய்யும்போதும், தீர்மானிக்க விவாதிக்கும்போதும், பேசும்போதும் அதில் (இயக்கத்தில் உள்ள) ஒவ்வொருவருக்கும் தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமை இருக்கும். அது முடிந்த பிறகு அதற்கு அடங்கி இருப்பதுதான் கட்டுப்பாடாகும். அதை மீறினவர்கள், முறைகூறுகிறவர்கள் செய்கையும் பேச்சும் கட்டுப்பாட்டுக்கு மாறுபட்ட காரியமாகும். ஒரு முதலாளி(எஜமான்)கீழ்இருந்து காரியம் பார்ப்பவர்களுக்கும் ஒரு இயக்கத்தில் ஒரு தலைவன் பின்னிருந்து பின்பற்றுகிறவர்களுக்கும் சுதந்திரம் இருக்க முடியாது. கொள்கை திட்டம் முடிந்துவிட்டால் பேசாமல் பின்பற்ற வேண்டியதுதான். அது தனக்குப் பிடிக்காவிட்டால் வெளியேறிவிட வேண்டியதுதான் வெளியேறி தனித்து வாழ முடியாவிட்டால் எதிர்த்துக்கொண்டு இருப்பதை சிலர் தங்கள் சமத்து என்று கருதுகிறார்கள். இதனால் இயக்கத்துக்குத் தொல்லை கொடுத்து தங்கள் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளுவதாக சிலர் கருதுகிறார்கள். அது அறியாமை என்பதுமாத்திரமல்லாமல் தங்கள் நிலை தாழ்வடைவதையும் அறியாதவர்களாகிறார்கள்.

நம் இயக்கம் வேறே சிலர் மாத்திரம் சேர்ந்து தன்னலம் அடையும் (லிமிடெட்) கூட்டுக் கம்பெனியாய் இருந்தால் மாத்திரமே ஒவ்வொரு கூட்டாளியும் உரிமை கொண்டாடலாம். பலரது (பொது) நலனுக்கு என்று சிலர் பொது நலம் கருதியதாகச் சொல்லிக் கொண்டுவந்து சேர்ந்து அதில் தங்கள் நலனுக்குத்தக்கபடி நடமுறை இல்லையானால் கலகம் செய்வது என்பதும், அப்படிக் கலகம் செய்து கொண்டு ஸ்தாபனத்தையும் தலைவரையும் கட்டுப்பாடு இல்லை; ஒழுங்கு இல்லை; சர்வாதிகாரம் நடக்கிறது என்பதும் வெறுக்கத்தக்கது என்பதோடு முடியாததுமாகும்.

யுத்தத்தில் சேர்ந்த யுத்த வீரன் ஊதியமில்லாமல் சேவை செய்பவனானாலும் தளகர்த்தனைவிட அதிகம் தெரிந்தவனானாலும் யுத்தக் காரியத்தில் தளகர்த்தன் சொல்வதைக் கேளாமல் தளகர்த்தன் சொல்வதைத் தவறு சொல்லிக் கொண்டிருந்தால் அது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதா என்று பாருங்கள். யுத்தத்தில் சேரும்போது யோசித்தே சேரவேண்டும், அல்லது தளகர்த்தன் இன்னான் என்று தெரிந்த உடன் இவன் கீழ் நம்மால் தொண்டாற்ற முடியுமா என்று சிந்தித்துத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். இரண்டும் இல்லாமல் தளகர்த்தனை ஏமாற்றி அதிகாரம் கலவரம் செய்து பயனடைந்துவிடலாம் என்று கருதி உடுப்பைப் போட்டுக்கொண்டு முன்னணியில் நின்று சலாம் செய்துவிட்டு யுத்த முறை தனக்குக் கஷ்டமாய் இருக்கிறது என்று தெரிந்த உடன் தளகர்த்தனை சர்வாதிகாரியாய் இருக்கிறான், கட்டுப்பாடில்லாதவனாயிருக்கிறான் என்றால் இப்படிப்பட்டவர்கள் தன்னைத்தான் ஏமாற்றிக் கொண்டவர்களாவார்கள். இது சாதாரண மக்களுக்கும் புரிந்திருக்கவேண்டிய காரியம். ஆனால் நேர்மை அறியாது என்பதற்கு ஒப்பாக இப்படிப்பட்டவர்கள் காரியங்கள் இருக்கின்றன.

என்றாலும் மற்றவர்கள் நடைமுறைகளை, திட்டங்களை, கொள்கைகளை உணர்ந்து தங்களால் கூடுமானால் ஒத்துழைக்கவும், கூடாவிட்டால் விலகிக் கொள்ளவும் பழகிக்கொள்ளவேண்டும்.

## தற்கால அரசியல்

மந்திரி பதவி சீக்கிரம் ஏற்படும் என்கின்ற உணர்ச்சியே சிலர் கலவரம் செய்யக் காரணமாகிவிட்டது.

முதலில் ஒரு பையும்; கடைசியில் ஒரு கண்ணும் முளைத்தாலும் முளைக்கலாம். சண்டை முடியுமுன் மந்திரி பதவி ஏற்படப் போவதில்லை. ஏற்பட்டாலும் வங்காளம் சிந்து முதலியவை போல் சிரிப்பாய் சிரிக்க வேண்டியதுதான் இருக்கும், நமக்கு ஒன்றும் பயம் இருக்காது. ஆனால், அதனால் நமக்கு சரியான வேலையும் உற்சாகமும் இருக்கும்.

சாப்ரு கமிட்டி என்பது ஒரு ஜால வித்தையாகும். அறியா மக்கள் அதை மந்திரம், குட்டிச்சாத்தான் வேலை என்பார்கள். அறிந்தவர்கள் அது ஜால வித்தை என்பார்கள்.

எல்லாக்கட்சி மாநாடாக இருந்து பிறகு அது கட்சியில்லாதார் மாநாடாகி, சாப்ருவின் தனி முயற்சி ஆகி, காந்தி-ஆச்சாரி கூட்டு சூழ்ச்சி ஆசீர்வாதம் பெற்றதாகி, இப்போது சந்தி சிரிக்கும் தந்திரமாக ஆகிவிட்டது. அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டியதில்லை.

## சேன்பிரான்கஸ்கோ மாநாட்டு பிரதிநிதி

சென்பிரான்சிஸ்கோ மாநாட்டுக்கு சர் இராமசாமி முதலியார் பிரதிநிதியாய் போவது தகுதி இல்லை என்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள். அவர்களது அருமை தேசியவாதிகளும் ஆமாம் போடுகிறார்கள். சர் ராமசாமிக்கு பூணூல் இல்லாததால் தான் தகுதி இல்லை என்று சொல்லுகிறார்களே தவிர வேறு அவரைவிட கெட்டிக்காரர் விஷயம் தெரிந்தவர் யார் என்று இவர்கள் கருதுகிறார்கள் என்பது விளங்கவில்லை— இவர்கள் குட்டு வெளியாய்விடும் என்று கருதித்தான் தேசியவாதிகள் ஆட்சேபிக்கிறார்கள். "திராவிட நாடு வேண்டாம், பாகிஸ்தான் வேண்டாம்" என்று சொல்லி "நான் காங்கரஸ்காரனுமல்ல" என்றும் சொன்னால் சென்பிரான்சிஸ்கோவிற்கு அனுப்பப்படலாம் என்று கருதி சிலர் காணம் போட்டும் பார்த்தார்கள். ஆனால் ஏமாற்றம் அடைந்தார்கள்.

இனி நம் கட்சி போரால் சிலரது திருவிளையாடல் பற்றி சிறிது சொல்லுகிறேன் என்று சில விஷயம் விளக்கினார்.

ரோஜா முத்தையா

# இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாடு

## நடவடிக்கை விபரம்

(விசேஷ நிருபர்)

இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் முதல் மாநாடு காரைக்குடியில் சென்னைத் தலைவர் டி. சண்முகம் அவர்கள் தலைமையின் மிகச் சிறப்பாக 8-4-45 காலை 8½ க்கு ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸில் ஆரம்பமாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்துகொண்டிருந்தார்கள். பெரியார் ஈ. வெ. ராமசாமி, தளபதி சி. என். அண்ணாதுரை, மற்றும் தோழர்கள் டி. சண்முகம், க. அன்பழகன், ஏ. பி. ஜனார்த்தனம், புலவர் கா. மு. மாணிக்கம், இரா. நெடுஞ்செழியன், வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், ஈ. வெ. கி. சம்பத், என். தவமணி இராசன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். 7-4-45-ல் இரவே திருச்சி பொன்மலை பெரியார் தொண்டர் படையின் 100 பேர் காரைக்குடி வந்து சேர்ந்தார்கள்.

### தொண்டர்படைக் கூட்டம்

7-4-45 இரவு திருச்சி பொன்மலைத் தொண்டர் படை ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீசுக்கு இயக்க வாழ்த்தொலிகளுடன் வந்து சேர்ந்தது. அவர்களை காரைக்குடி பெரியார் தொண்டர் படைத் தலைவர் வரவேற்றுப் பேசினார். பின் பொன்மலை பெரியார் தொண்டர்படைத் தலைவருக்கு மாநாட்டுச் செயலாளர் கா. ராமசாமி அவர்களால் மாலையிடப்பட்டது.

தோழர் என். தவமணி இராசன் பொன்மலைத் தொண்டர் படையை வரவேற்று அவர்கள் மாநாட்டில் செய்யவேண்டிய தொண்டினைப் பற்றி எடுத்துக் கூறினார்.

மறுநாள் காலை 7 மணி வண்டியில் தலைவர்கள் டி. சண்முகம், பெரியார், அண்ணாதுரை முதலியோர் வந்து சேர்ந்தார்கள். தலைவர்களை வரவேற்க பொன்மலைத் தொண்டர் படையும் காரைக்குடி பெரியார் தொண்டர் படையும் புகை வண்டி நிலையத்தில் முன்னதாகவே சென்றிருந்தன. காரைக்குடி தொண்டர் படையினர் புகைவண்டி நிலையத்தினுள் வாத்தியங்களுடன் சென்று தலைவர்களை மாலையிட்டு வரவேற்று வந்தனர். வெளியே பொன்மலை தொண்டர் படையினர் இரு அணியாக அணிவகுத்து நின்று தலைவர்களை வணக்கம் (Salute) செய்து வரவேற்றகாட்சி மிகவும் அழகாக இருந்தது. தலைவர்களை தனிக்காரில் அவர்களுக்கென ஏற்பாடு செய்திருந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள்.

சிற்றுண்டிக்குப்பின் சரியாக காலை 8-30 மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று.

வரவேற்புக் கழகத் தலைவர் சொ. அருணாசலம் அவர்கள் தோழர் அன்பழகனை கொடியேற்றும்படி கேட்டுக்கொண்டார். தோழர் அன்பழகன் வழக்கம்போல் நீண்டதொரு சொற்பொழிவாற்றி கொடியேற்று விழா வாற்றினார்.

பின் வரவேற்புக் கழகத் தலைவர் பெரியாரவர்களைத் திறப்பு விழாவாற்றும்படி கேட்டுக்கொண்டார். பெரியாரவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் தற்கால அரசியல் நிலை குறித்து விளக்கி சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

வரவேற்புக் கழகத் தலைவர் வந்துள்ள மாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்று சென்னைத்தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்களைத்தலைமைவகிக்கக் கேட்டுக்கொண்டார். பின் தளபதி சி. என். ஏ. அவர்களும், பெரியாரவர்களும் மற்றும் இராமநாதபுர மாவட்டத்திலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த நம் இயக்கத்தோழர்கள் தலைவரை முன்மொழிந்து வழிமொழிந்து ஆதரித்தார்கள்.

நீண்ட கைதட்டலுக்கிடையே தலைவர் தோழர் டி. சண்முகம் தலைமையேற்று, தம்தலைமையுரையாற்றினார். அது வருமாறு:-

"பெரியார் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!! வரவேற்புக் கழக உறுப்பினர்களே!!!

இன்றைய மாநாடு மிக முக்கியமானது என்று நான் கருதுவதைப் போலவே நீங்களும் கருதுவீர்கள் என்று நம்புகிறேன். சேலம் மாநாட்டிற்குப் பிறகு நமது இயக்கம் எவ்வளவு முற்போக்கடைந்துள்ளது என்பது நான் கூறாமலே உங்களுக்கு விளங்கும். திராவிடநாட்டுச் சரித்திரம் எழுதப்படுமானால் அதில் சேலம் மாநாட்டு நிகழ்ச்சிகள்

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

மாந்தலே: அதற்குப்பின் 100 மைல்
தெற்கில் சிலர் போர் நடத்துகிறார்கள்
ஆனால்,
அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச்
செல்லுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு
வசதிகள்
அதிகம் தேவைப்படுகின்றன.
ஆகவே
நமது வீரர்களைத் துரிதப்படுத்த
மே. த. கவர்னர்
யுத்த நிதியில்
துருப்புக்கள் வசதி நிதிக்குப்
பணம் கொடுத்து உதவுங்கள்

குடி அரசு

1945-ளு ஏப்ரல்-மீ 14-உ

## ஜஸ்டிஸ் கட்சி ஏஜண்டுகள்

தோழர் M. N. ராய்கட்சி காரியதரிசி என்கின்ற முறையில் தோழர் கார்னிக் என்கின்ற பார்ப்பனர் ஒருவர் சென்னைமாகாணத்திற்கு வந்து தமிழ்நாட்டில் சில இடங்களில் மீட்டிங்குவைத்து தமது கட்சிப்பிரசாரம் செய்து பெரியார் அவர்களையும் மற்றும் திராவிட பிரமுகர்கள் சிலரையும் கண்டு பேசி சில இடங்களுக்கு திராவிட கழக ஆதரவுடன் சென்று அங்காங்கு கூட்டம் நடத்திவிட்டு திரும்பிச்சென்றவர் 'இண்டிபெண்டண்டு' பத்திரிகையில் "திராவிட கழகத்திற்கு அமைப்பு இல்லை" என்றும் அதற்கு "பொதுமக்கள் நலத்துக்கு ஏற்ற குறிப்பான திட்டம் இல்லை" என்றும், எல்லோரும் ராய்க்கட்சியில் சேருவதுதான் நலமென்றும் எழுதி இருக்கிறார். பார்ப்பனரிடம் இதைவிட வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அதோடு அவர் நிற்கவில்லை. தோழர் பாலசுப்ரமணிய முதலியார் பெரிய வீரர் என்றும், அவர் நல்ல சமுதாய பொருளாதார அரசியல் திட்டம் வைத்து ஜஸ்டிஸ் கட்சியைப் புதுப்பிக்க முயற்சிக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்.

"உன் சிநேகிதன் பெயரைச் சொன்னாலே போதும் உன்னுடைய யோக்கியதையைத் தெரிந்து கொள்ளக்கூடும்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, அதுபோல் தோழர் பாலசுப்ரமணிய முதலியாரின் சிநேகம் பெற்று அவரது முயற்சியையும், தகுதியையும் புகழும் ஒருவர், அதுவும் பார்ப்பனராய் இருப்பவர், பார்ப்பனீயத்திற்கு விரோதமாக தொண்டாற்றி வரும் ஒரு ஸ்தாபனத்தை, அதனால் தனக்குஎன்ன தான் அனுகூலம் இருப்பதாகக் கண்டாலும், அதில் என்னதான் உயர்வானதிட்டங்கள் இருந்தாலும் எப்படி ஒப்புக்கொள்ளவோ உண்மையை பேசவோ முடியும்? ஆகவே தோழர் கார்னிக் அவர்கள் இப்படி எழுதி இருப்பதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஆனால் திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) கட்சிக்குக் கொள்கை இல்லை, திட்டம் இல்லை என்று சொல்லித்தான் கட்சிக்குப் பலம் சேர்க்க முயற்சித்த புத்திசாலித்தனத்தைப் பற்றி நாம் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை.

அதோடுகூடவே திராவிட கழக ஸ்தாபனம் அங்காங்கு இருப்பதையும் அந்த ஸ்தாபனத்தார்கள் இவருக்குக் கூட்டம் சேர்த்துக் கொடுப்பதில் சிறிதாவது உதவியதையும் நேரில் பார்த்து இருந்தும், திராவிட கழகத்துக்கு ஸ்தாபனம் இல்லை என்று சொன்ன தைரியத்தையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இதிலிருந்து ராய்கட்சி ஏஜண்டுகள் வேலை செய்யும் தன்மை எப்படிப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள நம்மக்களுக்கு இடமேற்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

பொதுவாகவே நமக்கு வெளிமாகாணத்தார் நட்பும் ஆதரவும் இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதி வெளியாருடன் எவ்வளவு நட்பு வைத்து எவ்வளவு ஒத்துழைப்புக்காட்டினாலும், "எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய்? உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்" என்கின்றதன்மையில்தான் வெளிமாகாணத்தார் இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் திராவிட நாடு பெற்றால் ஒழிய வேறு எந்த வழியாலும் நாம் முன்னேற்றமடையமுடியாது என்பதையும், நம்பிக்கையேதான் நமக்கு உதவி என்பதையும் உறுதிப்படுத்துவனவாகும்.

## ஆச்சாரியார் அழுகை

"காங்கரஸ் தலைவர்கள் நாச வேலைகளையும், கலகங்களையும், கலவரங்களையும் ஜனங்கள் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று 1942 ஆகஸ்ட், செப்டம்பரில் நாடெங்கும் பிரசாரம் செய்யப்பட்டதால் கல்வி பயிலாத ஒன்றுமறியாத ஜனங்கள் இந்தப் பிரசாரத்துக்கு இரையானார்கள்"

என்று கூறி நாசவேலையில் ஈடுபட்டு தண்டனை அடைந்த மக்களுக்கும் கருணை காட்டவேண்டுமென்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் முகாரியில் வேண்டுகோள் விடுக்கிறார். வைசிராய் அவர்கள் கருணைகாட்டட்டும். அறியாத சிறுவர்களாக இருந்தால் அவர்கள் அறிவிக்கப்படவேண்டுமே ஒழிய கொல்லப்படவேண்டுமென்று எவரும் விரும்பார்கள்.

ஆனால் காங்கரஸ் தலைவர்கள் அக்காலத்தில் இதை (இந்த நாச, கொலை வேலைகளை) மறுத்தார்களா? காங்கரஸ் தொண்டர்கள் இதை மறுத்தார்களா? தேசியப் பத்திரிகைகள் அப்போது மறுத்து எழுதினவா?

மறுக்காவிட்டாலும் "வேண்டாம்" என்று யாராவது அறிக்கை விட்டார்களா?

காந்தியாரை "இப்படி நாச வேலை செய்யக்கூடாது" என்று ஒரு அறிக்கை விடும்படி சர்க்கார் கேட்டுக்கொண்டதற்கு காந்தியார் செவிசாய்த்தாரா?

காங்கரசும் காந்தியாரும்தான் இந்த நாசவேலைக்குக் காரணம் என்று சர்க்கார் எடுத்துக்காட்டும் ஆதாரங்களுக்கும் பிரமாணங்களுக்கும் பதில் சமாதானம் நியாயமான முறையில் சொன்னார்களா? அந்த நாசவேலையின் பயனாய் உயிர் இழந்தவர்களுக்குப் பொருள் நஷ்டமடைந்தவர்களுக்கு காங்கரஸ் பரிகாரம் இல்லாவிட்டாலும் காரியத்தில் சம்மந்தப்பட்டவர்களுக்குக் காட்டும் அனுதாபத்தில் 1000-ல் ஒரு பங்கு காட்டினார்களா?

காங்கரஸ்காரர்கள் குற்றம் ஒப்புக்கொள்ளாமல் அனுதாபம், கருணை வேண்டினால் அதில் உண்மை எப்படி இருக்க முடியும்? சாமர்த்தியம் தானே இருக்க முடியும்?

## முத்தமிழ் மாநாடு

"முத்தமிழ் மாநாடு" தஞ்சையில் ஜூன் முதல் வாரத்தில் நிகழும். பல பகுத்தறிவுப் பேரறிஞர்கள் கலந்துகொள்வார்கள்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் சென்னையிலிருந்து கும்பகோணம், திருச்சி, காரைக்குடி முதலிய இடங்களுக்குச் சென்று கூட்டங்களிலும் மாகாட்டிலும் கலந்துவிட்டு 10-ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். மேலும் பூரண ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக 12-ந் தேதி காலை ஏர்க்காடுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அங்கு இம்மாதம் இறுதி வரை ஓய்வு எடுத்துக் கொள்வார்.

## திராவிட மாணவர் சுற்றுப்பிரயாணம்.

திராவிட மாணவர்களே!

இவ்வாண்டு கோடைகால திராவிட மாணவர்கள் — சுற்றுப் பிரயாணம் மே மாதம் முதல் வாரத்திலிருந்து துவக்கப்படும்.

மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு மே மாதம் 3ந்தேதி முதல் ஈரோட்டில் நடைபெறும். பெரியார், தோழர்கள் அண்ணாதுரை, டி. பி. வேதாச்சலம், எ. பி. ஜனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன் முதலியவர்கள் மாணவருக்குரிய இடங்கள் குறித்து அறிவுரையாற்றுவார்கள்.

மாணவத் தோழர்களை வரவழைத்து கூட்டங்கள் நடத்த எண்ணும் தோழர்கள் எங்களுக்குத் தயவு செய்து அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,

திராவிட மாணவர் கழகம்.

## ரூஸ்வெல்ட்டின் மறைவு

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் திடீரென்று 12-4-45-ந் தேதி பிற்பகல் இயற்கை யெய்தார் என்பதை யறிந்து வருந்துகிறோம். இன்றைய போரை விரைவில் முடிவுக்குக்கொண்டு வரவேண்டும் என்றும், உலகில் யாவரும் சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்றும் போராடிக் கொண்டிருந்த தோழர் ரூஸ்வெல்ட், யுத்த முடிவுறும் தருவாயிலிருக்கும்போது மிக முக்கியமான பிரச்சினைகள் ஆலோசிக்கப்படவேண்டிய தருணத்தில் மறைந்தது உலகுக்குப் பெரும் நஷ்டமாகும்.

## ரத உற்சவத்தில் விபத்து

ஸ்ரீவில்லிபுத்தூரையடுத்த மம்சாபுரம் ஸ்ரீ மாரியம்மன் கோயில் ரத உற்சவத்தில், 1-4-45-ந் தேதி அச்சு முறிந்து கருப்பையா தேவர் மகன் கிருஷ்ணசாமி தேவர் குடும் கட்டை கொடுத்துக்கொண்டிருந்தவர் இறந்து போனார்.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 14-4-45ந் தேதி வரை 30776 அங்கத்தினர்கள் ரூ.3068—14—0 சந்தா

எப்ரல் மாதம் 14ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5464 | 9. வட ஆற்காடு | 1571 |
| 2. தஞ்சை | 5113 | 10. மதுரை | 1405 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 780 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சினாடு) | 185 |
| 5. இராமநாதபுரம் | 2261 | 13 பெங்களூர் | 158 |
| 6. திருநெல்வேலி | 2088 | 14. புதுக்கோட்டை | 59 |
| 7. சென்னை | 1700 | | |
| 8. தென் ஆற்காடு | 1646 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 30776. சந்தா ரூ. 3068-14-0.

## கே. கே. நீலமேகம்

அறிக்கை நெ 1.

கும்பகோணம், ஏப். 12-

கடந்த 1-4-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை எனக்கு ஜுரம்கண்டு பின் அம்மை வார்த்து வீட்டில் படுக்கையிலிருக்கிறேன். இன்னும் சில தினங்களில் தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொள்ளக் கூடிய நிலைமையை அடைந்திருக்கிறது. ஆனாலும், ஒருமாத காலம் வெளியில் செல்ல முடியாத நிலையில் உடல் நிலை ஏற்பட்டிருக்கிறபடியால் தோழர்கள் நேரிலும், லெட்டர் மூலியமாகவும் கொஞ்சம் சிரமம் கொடுக்காமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இதுவரையில் வந்திருக்கும் திராவிடநாடு மாநாடுகளுக்கும், பாகிஸ்தான் பிரிவினை மாநாடுகளுக்கும், திருமணங்கள், திறப்புவிழாக்கள், பல திறசான விழாக்களுக்கும் அழைப்பு அனுப்பிய தோழர்களும் நான் வாராமைக்குக் காரணம் உணர்ந்து மன்னிக்கும்படி கோருகிறேன்.

அறிக்கை நெ 2.

தஞ்சை ஜில்லா தோழர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்:

தாலுகா ஒன்றுக்கு 100 (ஒரு நூறு) அங்கத்தினர் வீதம் குறைந்தது சேர்த்துக் கொடுத்து தஞ்சை ஜில்லாவை திராவிடர் கழக மெம்பர் லிஸ்டில் தலைமை வகிக்கச் செய்ய வேண்டியதுதான் தங்களின் இன்றியமையாத கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதனால் கோயம்புத்தூர் ஜில்லா தோழர்கள் கோபித்துக்கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

கே. கே. நீலமேகம்,

திராவிடர் கழகம்,

கும்பகோணம்.

## திராவிடர் கழக ஆண்டு விழா

திருவரங்கம், திருவானைக்கா "திராவிடர் கழக முதலாவது ஆண்டு பூர்த்தி விழா 22-4-45-ந் தேதி திருவரங்கம் தெற்கு வாசலில் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுசமயம் தோழர்கள் ஜனார்த்தனம் பி. ஏ.,; எஸ். தவமணிராசன், ஈ. வெ. கி. சம்பத். கரூர் பி. கே. அய்யா, அன்பழகன், துறையூர் மாணவத் தோழர் து. மா. பெரியசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஒலிபெருக்கிக் கருவி அமைக்கப்படும்.

# சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்

என்னும் புதிய நாடகத்தில்
அருமைத் தளபதி
C. N. அண்ணாதுரை
அவர்களும்,
N. S. K. நாடக சபா
நடிக மணிகளும்,
"சந்திரோதயம்" புகழ் பேராளர்
சுப்ரமண்யம், சி.வி.எம். அண்ணாமலை,
இராஜகோபால், பிரபல நடிகர்களும்
29–4–45உ ஞாயிறு மாலை
6-மணிக்கு சென்னை
செயின்ட்.மேரீஸ் மண்டபத்தில்
தோன்றி நடிப்பார்கள்.
டிக்கட்டுகள் விபரம்: ரூ. 5/8, 2/4, 1/2, அணா 9 (வரியுடன்)

குறிப்பு:— வெளியூர் தோழர்களும் பலர் சென்ற நாடகத்தின்போது டிக்கட் கிடைக்காமல் திரும்பிவிட்டனர். எனவே, வெளியூரிலிருக்கும் இயக்கத் தோழர்கள் உடனே கடிதம் மூலம் டிக்கட்டை ரிஸர்வ்செய்து கொள்ளவேண்டுகிறோம். பத்து ரூபாய்க்கு மேற்பட்ட நன்கொடை அளிப்பவர்களுக்கு மட்டும் தனியிடம் ரிஸர்வ் செய்யப்படும். டிக்கட்டுக்கு கடிதம் எழுதுவோர், 'என்.வி.என். காரியதரிசி, சென்னை சுயமரியாதைச் சங்கம், 18, பெருமாள்முதலி தெரு, பெத்துநாய்க்கன், பேட்டை ஜி. டி. சென்னை.' என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.

சென்னையில் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட் விற்பனையாகி வருகிறது:—

1. பி. எ. கே. பழனிச்சாமி, பருப்பு வியாபாரம், 20 கிரேஸ் கார்டன் 3-வது சந்து, இராயபுரம்.
2. என்.எம். சுப்ரமண்யம், 50,சாரா பணப்ப நாயக்கன் தெரு, வண்ணை பம்பதி.
3. டி. மகாதேவன், கிழல் பேபர் மார்ட், சுமைதாங்கி, தங்கசாலைத்தெரு.
4. செல்லம் அண்டு சன்ஸ், ஜவுளி வியாபாரம், தேவராஜ முதலிதெரு, பார்க்டவுன்.
5. எ. எஸ். ராமன் C/o ஆதி அண்டு கம்பெனி, புத்தகவியாபாரம், அப்பா பில்டிங்ஸ் சைனா பஜார்.
6. சி. தங்கராஜ், 41 லக்ஸ்ரோட், ஓட்டேரி, பெரம்பூர் சென்னை.
7. என். டி. எம். பழனிச்சாமி, 6 கிராமத்தெரு, புரசைவாக்கம்.
8. எஸ். வி. சாமி, 50 கார்னீஸ்வரர் கோயில் தெரு, மைலாப்பூர்.
9. ஆர். டி. ஐ. சித்தார்த்தன் & எம். அமிர்தவாசகம் வில்லிவாக்கம் சமதர்ம சங்கம், அம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம்.

## டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள்

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53-வது வருட பிறந்த நாள் 14-4-45-ந் தேதி வருகிறதென்றும் அதை நாடெங்கும் கொண்டாடவேண்டுமென்றும் சென்னை மாவட்ட ஷெடியூல்டு வகுப்பு சங்கத்தார் தெரிவிக்கின்றனர்.

## தியாகராயநகர் செக்கண்டரி பள்ளி

### சி. டி. நாயகம் நினைவு

சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சர் ஆ. இலட்சுமணசாமி முதலியாரவர்கள், காலஞ்சென்ற தோழர் செ. தெ. நாயகம் அவர்களின் (இப்பள்ளியின் பொருப்பாளராயிருந்தவர்களும், பள்ளிக்கூட மனையும், கட்டிடமும் உள்படதாம் கட்டிய பொருள் முழுவதையும் கல்விக்காகக் கொடுத்துதவியவர்களும்) நினைவுச் சின்னக் கல்லை 22-4-45 ஞாயிறு மாலை 5-30 மணிக்குத் திறந்துவைக்கவும், பள்ளி வருடாந்திர கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்கவும் அன்பு கூர்ந்து இசைந்துள்ளார்கள்.

பீகம் அமருதீன் அம்மையாரவர்கள் கூட்டத்தில் பேசவும் இசைந்துள்ளார்கள். அனைவரும் வர வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

செ. தெ. நாயகம்

## புதுக்கோட்டை இக்பால் இளைஞர் கழகம்

### ஐந்தாம் ஆண்டு ஆரம்பவிழா

23-4-45 மாலை 3-30 மணிக்கு (ஜின்னா பார்க்கில்) மேற்படி விழா நடைபெறும். அவ்வமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## மருத்துவர்குல சங்கம்


சென்னை மாகில மருத்துவர் குல சங்கக் கமிட்டி அமைப்புக் கூட்டம் 28-4-45-ந் தேதி திருச்சி நகர மண்டபத்தில் தோழர் எஸ். என். ஆனந்தம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## குடந்தையில் பன்னீர்செல்வம் நாள்

காலஞ்சென்ற சர். பன்னீர்செல்வம் அவர்களின் நினைவு நாள் 6-4-45-ந் தேதி குடந்தையில் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 7 மணிக்கு காங்கேயன் பார்க்கில் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கிருஷ்ணமூர்த்தி, என். ஆர் சாமி, பெரியார் ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.


## கொசு வலைகள்

நன்றாக தைக்கப்பட்டதும், நீடிக்கக்கூடியதுமான நான்கு மூலைகள் முழுமையும் உள்ள சிறந்த வெள்ளை வலைகள். ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு லேட் இனாம்.



| நீளம் | அகலம் | உயரம் | சாதாரணம் | சிறந்தது | ஸ்பெஷல் |
|---|---|---|---|---|---|
| 6 அடி | $3\frac{1}{2}$ அடி | $3\frac{1}{2}$ அடி | ரூ. 4/10 | 5/10 | 7/ 4 |
| 6 „ | 4 „ | 4 „ | „ 5/ 6 | 6/10 | 8/ 2 |
| $6\frac{1}{2}$ „ | $4\frac{1}{2}$ „ | $4\frac{1}{2}$ „ | „ 6/ 2 | 7/10 | 8/12 |
| 7 „ | 5 „ | 5 „ | „ 7/ 4 | 8/ 6 | 10/– |
| $7\frac{1}{2}$ „ | 6 „ | 6 „ | „ 8/– | 9/ 6 | 11/– |

பாக்கிங் & போஸ்ட்டேஜ் ரூ. 1.
இரண்டு ஆர்டர்களுக்கு தபால்செலவு இனாம்.
The Indian Trading Co.. Post Box No. 12220 Calcutta,

## எங்கள் புது வருஷ நற்செய்தியும் நல்வரவும்

மேனகா சிலேட்டுகள் கைதேர்ந்த திராவிடத் தொழிலாளர்களால் செய்யப்பட்டவை. உறுதியிலும் உபயோகத்திலும் மேனாட்டு சிலேட்டுகளை தோற்கடிப்பவை.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்
மேனகா சுதேசி சிலேட் பாக்டரி,
Prop. G. சண்முகம்,
பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.


ரோஜா முத்தையா

( 5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டுமென்றே கூறுவேன். இதுவரை நமது கட்சி உழைப்பின் உயர்வை அறியாத, பட்டம், பதவி, சுயநல வேட்கை கொண்ட ஒரு சில கூட்டத்தாரிடமே இருந்து வந்தது. ஆனால் சேலம் மாநாட்டிற்குப் பிறகு உழைப்பாளிகளாகிய நம் திராவிட இளைஞர்களுக்கு வந்துவிட்டது. இனி திராவிட மக்களுக்குமட்டுமல்ல இந்நாட்டிற்கும் விமோசனம் ஏற்பட்டுவிட்டதென்றே கூறலாம். அவ்விமோசனத்தின் அடிப்படைதான் திராவிடன்தான். நாட்டுப்பிரிவினை வேண்டுமென்ற கோரிக்கை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மற்றவர்கள் கூறுவதுபோல் பாக்கிஸ்தான் கூச்சலுக்குப் போட்டியாக இந்தத் தான் கூச்சலைப் போன்றதல்ல நமது கோரிக்கை. முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா அவர்கள் பாக்கிஸ்தான் பிரச்னையைக் கிளப்புவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டுத் தலைவர் பெரியார் அவர்கள் திராவிட நாடு தனியாக வேண்டுமென்று பேசியுள்ளார். அதற்குக் காரணம், பெரியாரின் முப்பதாண்டு அரசியல் அனுபவம் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களின் அரசியல், வாணிபம், கலை, நாகரீகம் இன்னோரன்ன பலவற்றிலும் ஆரிய அநாகரீக ஆதிக்கம் ஆட்சிசெய்ய ஆரம்பித்ததேயாகும். மற்றும், தேசியம் என்ற பெயரால் நம் மாகாணத்தின் செல்வங்களை எல்லாம் வடநாட்டார் வாணிபத்தின்மூலம் கொள்ளையிட்டுவருவதை நாம் காண்கிறோம். ஆகவே, நாட்டுப் பிரிவினை சுயராஜ்யத்தைவிட மிக முக்கியமாகும். இது சாத்தியமா?, என்று சிலர் கேட்கின்றனர். அப்படிப்பட்டவர்களை உலக சரித்திரத்தைப் புரட்டிப்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற மகாயுத்த முடிவையும் பூகோளப் படத்தையும் புரட்டிப் பார்க்கட்டும். நாட்டுப் படமும் எல்லைக் கோடுகளும் மக்களால் படைத்துக்கொள்ளக் கூடியவைகளாகும். ஆகவே, எந்த நாட்டையும் எல்லையையும் நாம் நினைத்தபடி

ரோஜா முத்தையா


## திராவிடப் பதிப்பக படங்கள்

| | |
|---|---|
| நமது தலைவர் பெரியார் | 0—1—0 |
| நமது தலைவர் பேட்ஜ் | 0—1—0 |
| தளபதி அண்ணாதுரை | 0—1—0 |
| தோழர். அம்பேத்கார் | 0—2—0 |
| இளந்தாடி நெடுஞ்செழியன் | 0—1—0 |
| தோழர். அன்பழகன் | 0—1—0 |
| தோழர். செனார்தனம் | 0—1—0 |
| தோழர். ஏ. டி. பன்னீர்செல்வம் | 0—1—0 |
| தோழர். ஸ்டாலின் | 0—1—0 |
| வேலூர் தோழர். சின்னராஜ் | 0—1—0 |

நமது தலைவர் பெரியார் வாழ்க என்னும் அச்சில் பொறிக்கப்பட்ட ரப்பர்ஸ்டாம்பு ஒன்றின்விலை 1—4—0

ஆர்டர் கடிதங்களை முக்கியமாக கவனிக்கப்படும். நல்ல கமிஷனுண்டு.

திராவிடன் பதிப்பகம், 133லாங்குபசார், வேலூர். (N.A.)


காலப் போக்கிற்கேற்றவாறு திருத்தியமைத்துக் கொள்ளலாம். இதில் யாரும் தலையிட முடியாது. உதாரணமாகச் சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு கிழக்கு ஐரோப்பாவில் எத்தனை மாறுதல்கள் நடந்திருக்கின்றன பாருங்கள்! செர்பியா மாண்டிநிக்ரோ போன்ற இரண்டு அரசுகள் மறைந்தன. ருமேனியாவுடன் பல நாடுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அதைப் போலவேதான் வடநாட்டுத் தொடர்பிலிருந்து சென்னை மாகாணம் பிரிந்து திராவிடநாடாகத் திகழவேண்டுமென்பது. ஆகவே நாம் கோரும் நாட்டுப் பிரிவினை அவ்வளவு கடினம் என்று எனக்குத் தோன்றவில்லை. பாகிஸ்தான் பிரச்சினையைவிட மிக எளிதில் நமது திராவிட நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாமென்பதே எனது அபிப்பிராயம். திராவிட வீரர்களே விடுதலை உங்கள் கையிலிருக்கின்றது. அதனைப் பெற உங்களுடைய உழைப்பும் கட்டுப்பாடும் மிக மிக அவசியமாகும்.

திராவிடக் கழகப் பெயர் மாற்றத்தைக் கண்டு பலர் பயப்படுகிறார்கள். சிலர் பயந்தும் நமது கட்சியை விட்டு வெளியே போய்விட்டார்கள். இது அவர்களுடைய பயங்கொள்ளித்தனமல்ல, அவர்களுடைய ஏகபோக சுயநலந்தான். பட்டம் பதவிகளை விட வேண்டுமென்ற சேலம் மாநாட்டின் முடிவு முட்டாள்தனமானதல்ல, யுத்தம் ஆரம்பித்தவுடன் ஆட்சியிலிருந்த காங்கரஸ்காரர்கள் நாட்டை எதிரியிடமிருந்து காப்பாற்றுவதற்குப் பதிலாக காட்டிக் கொடுத்து வெளியே வந்துவிட்டார்கள். பின்னும் சாக்குப்போக்குச் சொல்லி சத்தியாக்கிரகம் செய்தார்கள்; ஆகஸ்டு தீர்மானத்திற்குப் பிறகு கல்லால் அடித்து காலிகளைப்போல் நடந்துகொண்டார்கள்; பொது சொத்துக்களுக்குத் தீயிட்டு திருடர்களைப்போல் விளையாடினார்கள். இன்னும் ஆட்சிநடப்பதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். ஆனால், நாம் அன்றுமுதல் இன்றுவரை இனதாபிமானத்துடன் மட்டுமல்ல, தேசாபிமானத்துடனும் நடந்து வருகிறோம். சர்க்காரின் யுத்த நிதிக்கு கோடிக்கணக்கில் உதவி செய்தோம், நாடு நகரங்கள் மட்டுமல்ல கிராமங்களிலுள்ள மூலை முடுக்குகளிலும் சென்று யுத்தப்பிரசாரம் செய்தோம். சேமிப்பு நிதியை மிக க்ஷேமமாகவே இன்றும் வைத்து வருகிறோம். யுத்தமுனைக்குப் போனோர் வயிற்றுக்கில்லாத சோம்பேறிகள் என்று கூறினார்கள். இல்லை; அதுதான் தேசாபிமானம் என்று கூறி லட்சக்கணக்கான ஆட்களை அனுப்பினோம். இவ்வளவுக்கும் வெள்ளை அரசாங்கம் நம்மையோ நமது கட்சியையோ என்ன மதித்தது என்று கேட்கிறேன்? இந்த நன்றிகெட்ட நிலைமையில் சேலம் மாநாடு செய்த தீர்மானம் தவறாகுமா? "மதியார் வாசல் மிதிக்கவேண்

டாங்" என்றுதானே கூறியது. இதில் தப்பென்ன? சர் ஆர். கே. ஷணை அமெரிக்காவிற்கும், பாத்ரோவை சைபீரியாவிற்கும் அனுப்பிவிட்டால் மட்டும் போதுமா? நாட்டுமக்களின் இன்றைய நிலைமை என்ன? வெள்ளை ஆட்சியிலிருந்து நாம் எப்படி விடுதலைபெற வேண்டுமென்று நினைக்கின்றோமோ அதைப்போலவே ஆரிய அநாகரீக பழக்கவழக்கங்களிலிருந்தும் நமது மக்களும், நாடும் விடுதலை பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

நம்மைவிட்டுப் பிரிந்திருக்கும் சிலர் கூடி அடுத்தமாதம் ஓர் மாநாடு நடத்தப்போவதாகத் தெரிகிறது. நம்மைவிட்டுப் போனவர்களைப்பற்றி நமக்கு அக்கரையில்லாவிட்டாலும், நம்முடைய கட்சியின் பெயரால் திராவிடர்களுக்குச் செய்துவரும் இன்னல்களைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். அவர்களுடைய இச்செய்கை சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறதென்பதைவிட நான் அதிகமாகச் சொல்லவும் இஷ்டப்படவில்லை. அவர்கள் தங்கள் குற்றத்தை உணரும் நாள் வெகுதூரமில்லை. அப்படி அவர்களால் உணரமுடியாவிட்டாலும் இந்நாட்டு திராவிடமக்கள் அவர்களை உணரும்படிச் செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. சேலம் மாநாட்டிற்குப்பிறகு நமது கட்சி செய்துள்ள வேலை ஒப்பிட்டு கூற முடியாதது. இந்த குறைந்த நாட்களுக்குள் ஜில்லாவாரியாகக் கிளை ஸ்தாபனங்களும் முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்களும் பல மாநாடுகளும், நூற்றுக்கணக்கான கூட்டங்களும் நடந்திருக்கின்றன. இந்த நிலைமையைக் கண்டு எதிரிகள் வெட்கமடைகின்றனர்; நாம் பூரிப்படைகின்றோம்"

பின் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கி நாட்டின் எல்லைக் கோட்டினை எடுத்துக்காட்டி நீண்ட சொற்பொழிவாற்றி திராவிடநாட்டுப் படத்தைத்திறந்து வைத்தார்.

மாநாடு இடைவேளை உணவிற்காகக் கலைந்தது.

மாலை 3-30 மணிக்கு மீண்டும் மாநாடு கூடியது. தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் எதிரிகளும் போற்றும் தலைவர் நமது பெரியாரே என்ன பலருடைய கருத்துக்களையும் எடுத்துக்கூறி விளக்கி பெரியாருடைய படத்தைத் திறந்துவைத்தார்.

தில்லைப் பகுத்தறிவுப்புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் காலஞ்சென்ற நெல்லை மாவட்டத் தலைவர் சி. டி. நாயகம் அவர்களுடைய உருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறிதுநேரம் பேசியபின் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (தீர்மானங்களின் விபரம் பின்னர் வரும்)

பின் தோழர் எஸ். தவமணி இராசன் மாநாட்டில் தொண்டாற்றிய பொன்மலை பெரியார் தொண்டர்படையின் சேவையைப் போற்றி அவர்களுக்கு நன்றி செலுத்தி மாநாட்டு வரவேற்பிக் குழுவின் சார்பாக தலைவரவர்களிடம் பொன்மலைத் தொண்டர் படைக்குக் கொடுக்கும்படி ரூ. 25 கொடுத்து மேலும் குறைந்தது ரூ 25 ஒரு வாரத்தில் மாநாட்டார் அவர்களுக்கு அனுப்ப இசைந்துள்ளதாகவும் அறிவித்தார். தலைவர் தோழர் டி. சண்முகம் தொண்டர் படையினை வாழ்த்தி தொண்டர் படைத் தோழர் பெருமாள் அவர்களிடம் பணத்தைக் கொடுத்தார். தோழர் பெருமாள் அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு நன்றி செலுத்தி இதுகாறும்தொண்டர்படை செய்துள்ள சேவையை எடுத்துக் கூறி மேலும் எப்பொழுதும் சேவைக்குத் தயாராயிருப்பதாகவும் கூறினார். பின் தலைவர் டி. சண்முகம் அவர்களின் சார்பாக தோழர் அன்பழகனவர்கள் பொன்மலைத் தொண்டர் படைக்கு ரூ. 25 நன்கொடையளித்தார். நன்றி கூறலுடன் மாநாடு முடிவுற்றது.

## பொதுக் கூட்டம்

மாநாடு முடிந்த பின் தோழர் முத்து நாடார் தலைமையில் பொதுக் கூட்டம் அதே இடத்தில் நடைபெற்றது. தளபதி சி. என். அ. அவர்கள் இன்றைய நமது வேலைத் திட்டத்தை விளக்கிப் பேசினார். இடையிடையே பல வினாத்தாட்களைக் கொடுத்தார்கள். எல்லா வினாக்களுக்கும் எதிரிகளும் திருந்தும்படி பதிலிறுத்தார்.

பின் பெரியாரவர்கள் நம் சமுதாய நிலைமை விளக்கிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது பல கேள்வித்தாள்கள் வந்துகொண்டே இருந்தன. சுமார் 1மணி நேரத்திற்குமேல் பேசிவிட்டு எல்லா வினாக்களுக்கும் தக்க முறையில் பெருங் கைதட்டலுக்கிடையே பதிற்சொன்னார்கள். பதில் சொல்லும்போது இடையிடையே நமது தோழர்கள் கை தட்டுவதானது நம்பாசரைக்கு எதிரிகள் வருவதைத் தடைசெய்வதாகும் என்றும், அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லுகையில் கை தட்டுவதானது அவர்களை எளனம் செய்வதாகும் என்றும் கூறி அமைதிப்படுத்தினார்கள். பின் தலைவர் முடிவுரையுடனும் நன்றிகூறலுடனும் கூட்டம் முடிவுற்றது.

## புறப்பாடு

தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்களும் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களும் 8-4-45-ந் தேதி இரவு வண்டியிலேயே சென்னை சென்றுவிட்டார்கள். பெரியாரவர்களும் ஏனையதோழர்களும் 9-4-45-ஆந் தேதிமாலை 3-30 மணி வண்டிக்கு ஈரோடு சென்றார்கள். காரைக்குடி தொண்டர் படையினர் வழியனுப்பிவைத்தனர்.

புதுக்கோட்டைக் கல்லூரி மாணவர்கள் சுமார் 50 பேர் பெரியாரவர்களையும் மற்ற தோழர்களையும் புதுக்கோட்டை ஸ்டேஷனில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்து கையெழுத்துப் பெற்றுச் சென்றனர்.

## குடந்தையில் சீர்திருத்தத் திருமணம்

6-4-45-ந் தேதி மாலை 4 மணிக்கு குடந்தையில் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் தோழர் முனிசாமிக்கும் பாகீரதிக்கும் சீர்திருத்தத் திருமணம் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. தோழர்கள் எஸ். எச். சாமி, கிருஷ்ணமூர்த்தி, பட்டம்மாள் முதலியவர்கள் "சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம்" பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

ரோஜா முத்தையா

# திராவிட நாட்டுச் செய்திகள்

கரூர் தாலூகா மருத்துவர் முதலாளர் மாநாடு 13-3-45-ந் தேதி டாக்டர் கே. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். அப்பாவு தமிழ்க் கொடி ஏற்றிவைத்தார். எஸ். மாணிக்கம் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் இ. மாணிக்கம் பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் படத்தைத் திறந்து வைத்தார்.

அன்று மாலை கரூர் திராவிடக் கழகத்திலிருந்து தஞ்சை தோழர் கே. கணேசம் பிள்ளை கோஷ்டியாரின் மேளவாத்தியத்துடன் ஊர்வலம் புறப்பட்டு இரவு 11 மணிக்கு முடிவுற்றது.

கோபி மருத்துவ சங்கப் பொதுக் கூட்டம் தோழர் ஜி. என். இராஜு தலைமையில் 8-4-45-ந் தேதி நடைபெற்றது. மருத்துவரும் எதிர்காலமும் என்பது பற்றிப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். புதிய ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கோபியில் 1-4-45-ந் தேதி திராவிட நடிகர் கழகம் திறவப்பட்டது. தோழர்கள் சேதுராமன் தலைவராகவும், கன்னியப்பன், இப்ராகிம் இருவரும் காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். கழகத்தாரால் "மருதவாணி" என்னும் நாடகம் மே மாதத்தில் நடைபெறும்.

சேலம், திருச்சி ஜில்லாக்களின் தேவேந்திர நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 3-4-45-ந் தேதி தோழர் எம். பி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் "தன்மான நாடக நடிகர் கழகம்" திறவப்பட்டிருக்கிறது. 25-3-45-ந் தேதி நடந்த தேர்தலில் ஷை கழகத்திற்கு தோழர்கள் கே. வி. குப்புசாமி தலைவராகவும், மகாதேவன் உபதலைவராகவும், எம். பி. சுப்ரமணியம் காரியதரிசியாகவும், எம். எல். கந்தசாமி, ஏ. என். நாராயணன் துணைச் செயலாளராகவும், ஆர். ஏ. ராஜமாணிக்கம் பொருளாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஷை கழகத்தின் ஆதரவில் 30-3-45-ந் தேதி சர் ஏ. டி. பன்னீர்செல்வம் நாள் கொண்டாடப்பட்டது.

சீனிவாசநல்லூர் முத்துராஜ மகாஜன சங்க முதலாவது ஆண்டு விழா திருச்சி தோழர் எம். நடராசன் முத்துராஜா எம். ஏ., பி. எல்., தலைமையில் கொண்டாடப்பட்டது. சமூகக் கொடியை உறையூர் ஐ. சிவஞானம் முத்துராஜா ஏற்றிவைத்தார்.

தூத்துக்குடி அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்க சார்பாக கந்தகோபாலபுரம் அருந்ததியார் காலனியில் 31-3-45-ல் டி. ஆசிர்வாதம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 'சமூகத் தொண்டு' என்பது பற்றிப் பல தோழர்கள் பேசினார்கள்.

வவ்வாலடி மீலாதே ஷரீப் மாநாடு 18-3-45-ந் தேதி வவ்வாலடி ஹாஜியார் சதுக்கத்தில் ஆலிஜனாப் எம். ஏ. இஸ்மாயில் சாஹிப் தலைமையில் கூடியது. ஜனாப் எம். ஏ. ஷம்ஷுதீன் சாஹிப் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர்கள் டாக்டர் எம். எஸ். ராஜன், கன்னிலம் சப்ரிஜிஸ்டர் சி. சுப்பையா, கே. எம். ஷரீபு ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

வவ்வாலடி முஸ்லிம் லீக் தேர்தல் முஸ்லிம் லீக் ஹாலில் 21-3-45-ந்தேதி ஜனாப் சு. முகம்மது இப்ராஹீம் தலைமையில் நடைபெற்றது.

இராமனாதபுரம் மாவட்டம் செல்வராசன் கோட்டை ஆதிதிராவிட இளைஞர் கழகத்தின் திங்கள் பொதுக் கூட்டம் 3-4-45-ந் தேதி கொழும்பு கொன்பட்டி கிராவிரோட் 159 எண்ணுள்ள அறையில் தோழர் எஸ். கே. மாயகிருட்டினன் தலைமையில் நடைபெற்றது. புதிய ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கோவை ஜில்லா உணவுப் பொருள் ஆலோசனையாளர் கூட்டம் 28-3-45-ந் தேதி கோவை கலெக்டர் தோழர் A. F. W. டிக்ஸன் தலைமையில் கூடியது.

## புரசை திராவிடர் கழகம்

4-4-45-ந் தேதி மாலை சென்னை மெமோரியல் ஹாலில் புரசை திராவிடர் கழக திறப்பு விழா நடைபெற்றது. பாரிஸ்டர் எஸ். ஜி. ரங்கராமானுஜம் தலைமை வகித்தார். தோழர்கள் கே. அன்பழகன், ஜனார்த்தனம் திராவிடர் கலை என்பது பற்றிப் பேசினார்கள், தோழர் ஜீவரத்தினம் முதியோர் கல்வி கட்டாயக்கல்வி என்பது பற்றிப் பேசினார். பெரியார் ஈ. வெ. ரா. கழகத்தைத் திறந்து வைத்தார். திராவிட மணி பேசிய பின்பு சா. து. மு. பழனிசாமி நன்றிகூறக் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

## திருமணங்கள்

நாகூர் தோழர் எம். கனகசபை அவர்களுக்கும் மணக்கால் தோழர் முத்துசாமி பிள்ளையின் செல்வி தோழர் சரஸ்வதிக்கும், 30-3-45-ல் மணக்காலில் புரோகிதம் ஒழித்த திருமணம் சிறப்பாக நடந்தது. இதன் நினைவாக 'திராவிடநாடு', 'குடிஅரசு' பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

தமிழ்நாடு ராஜுக்கள் சங்கத் தலைவர் தோழர் எல். என். நரசிம்ம ராஜுவின் சகோதரர் தோழர் எல். என். முனுசாமி ராஜுக்கும், தோழர் சம்பகவல்லிக்கும் சேலத்தில் 2-4-45-ந் தேதி எவ்வித சடங்குகளுமின்றி சீர்திருத்தத் திருமணம் நடந்தது.

க. வெள்ளாளப்பட்டியில் சேலம் பிரின்சிபால் தோழர் ஏ. இராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் 11-3-45-ந் தேதி காலை பழனிவேலுக்கும், அம்மணிக்கும் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். இத்திருமணத்தை முன்னிட்டு 'குடிஅரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## வீரவாலி

"இராமாயணம் ஆரிய திராவிட போராட்டத்தைக் குறிப்பிடும் கதை" என்ற சரித்திரக்காரர் முடிவையும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, மு. சி. பூர்ணலிங்கம், பெரியார் ராமசாமி ஆகியோர் ஆராய்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு தோழர் ப. கண்ணன் அவர்கள் எழுதிய "வீரவாலி" நாடகத்தைச் சலகண்டபுரம் "பகுத்தறிவு நடிகர் கழக"த்தினர் பயின்று வருகின்றனர். தக்கோர் தலைமையில் விரைவில் ஓர் முக்கிய நகரில் நடைபெறும். ஆரிய ராமனின் வஞ்சகமும் பேடித்தனமும், திராவிட வாலியின் நேர்மையும், வீரமும் இதில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. ரேடியோ நாடகத்தில் புகழ்பெற்ற தோழர் கண்ணன் அவர்களே வாலியாக நடிக்கப்போவது குறிப்பிடத்தக்கது.

## ஆதிதிராவிட மாநாடு

காஞ்சீபுரம் தாலுகாவைச் சேர்ந்த மருதம் கிராமம் லேபர் ஸ்கூல் அருகில் 20-4-45-ந் தேதி ஆதிதிராவிட மாநாடு நடைபெறும். அதுசமயம் தோழர்கள் மீனாம்பாள் சிவராஜ், ஆர். ராஜகோபால், செட்டி, மற்றும் பலரும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றங்கருதி சொற்பொழிவாற்றுவார்கள்.

ரோஜா முத்தையா

## செல்வம் நாள்

13-3-45-ந் தேதி ஈரோடு வெளிப்பாளையம் ஆவுரிக்கிடங்கில் கழகத் தலைவர் தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் சர். செல்வம் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. அது சமயம் அண்ணாமலைப்பல்கலைக் கழக மாணவர் தோழர்கள் சி. நரசிம்மன், குடந்தை பாவலர் பாலசுந்தரம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

சர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களது நினைவு நாள் 11-3-45 சாத்தூர் திராவிடர் கழகக் கட்டிடத்தில் தோழர் சா. கருப்பையா அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. சர் செல்வம் அவர்களது சேவை பற்றி தோழர்கள் பி. இராஜமணி, ஜே. அக்போன்ஸோ ஆகியவர்கள் பேசினார்கள். அம்பேத்கார் வாசகசாலை கோஷ்டியாரால் ஓர் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. பி. நடராஜன் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

* *

24-3-45-ல் பட்டுக்கோட்டை "திராவிடர் கழகம்" "சுயமரியாதைக் கழகம்" இவைகளின் சார்பாக ஒரு நாள் விழா நடத்தப்பட்டது. தோழர் வி எஸ். குழந்தை தலைமை வகித்தார். தோழர் கருப்பையா இயக்கப் பாட்டுகள் பாடினார். தோழர்கள் குழந்தைவேலன், கரந்தைப் புலவர் வி. அ. அங்கசாமி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் கே. என். [illegible] நன்றி கூறதுடன் கூட்டம் முடிவுற்றது.

* *

சேலம் சுயமரியாதைச் சங்கத்தில் தோழர் தமிழ்மணி தலைமையில் [illegible] நடத்தப்பட்டது. மாணவ மாணவிகள் செல்வத்தின் சிறப்புக் குறித்து பேசினர். அவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

அன்று மாலை 7 மணிக்கு மேல் தோழர் எம். ஆர். சித்தையன் தலைமையில் செல்வம் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. கிருஷ்ணசாமி, கே. ஜெகதீசன்; கஸ்தூரி மாணவர் வை. திருநாவுக்கரசு, எஸ். என். கோவிந்தன், ஆர். நடேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

## திராவிடக்கழகங்கள்

திருச்சி வரகனேரியில் திராவிட வாலிபர் கழகம் 25-3-45-ல் தோழர் அ. காபிரியேல் அவர்கள் தலைமையில் தொடக்கப்பட்டது. தோழர்கள் அ. [illegible]தரியம், அ. துரைசாமி, எஸ். மாணிக்கம், ஜே. பி. இருதயசாமி, டி. [illegible]சாமி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

பேராவூரணி திராவிடர் கழகத்தின் சார்பாக 25-3-45-ல் தோழர் மாப்பிள்ளையன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், நாகை என். பி. காளியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

காட்டுப்புத்தூர் திராவிடர் கழகக் கூட்டம் 25-3-45-ல் தோழர் எ. அடைக்கலசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் புலிப்பாண்டியனும் ஏனையவரும் பேசினர். தோழர் கே. கந்தசாமி தலைமையில் நிர்வாககுழு அமைக்கப்பட்டது.

* *

முக்கூர் கிராமத்தில் வாழ்க்குடை திராவிடர் கழக சார்பில் கழகத் தலைவர் வி. எஸ். கிருஷ்ணசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஈ. வெ. ரா. அவர்கள் நம் நாட்டிற்காக தொண்டாற்றி வரும் நிலைமை பற்றி தோழர்கள் பி. சுப்ரமண்யம், என். முத்துக்கவுண்டர், தங்கவேல் உடையார் ஆகியோர் பேசினார்கள்.

* *

நாகல் கிராமத்தில் வாழ்க்குடை திராவிட கழக சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு பெரியார் படத்தை கழகத் தலைவர் வி. எஸ். கிருஷ்ணசாமி திறந்துவைத்து பெரியார் அவர் தொண்டைப் பற்றி பேசினார். கழக உறுப்பினர் தொடர்ந்து பேசினர்.

* *

வாழ்க்குடை திராவிட கழக சார்பில் [illegible] கிராமத்தில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் நாராயணசாமி நாயுடு தலைமையில் நடைபெற்றது. வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் வாலிபர் கடமை பற்றிப் பேசினார். தோழர் [illegible]மணி என்பவர் திராவிடர் ஆரியர் என்னும் பாகுபாட்டை விளக்கிக் காட்டினார். பின்னர் அவ்வூர் தோழர் என். பலராம நாயுடு எல்லோரும் அங்கத்தினராகச் சேர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

* *

கழனிப்பாக்கம் திராவிடர் கழக சார்பில் ஓர் பொதுக் கூட்டம் கழக உபதலைவர் கே. முனுசாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. ஆரியர் கொடுமை என்பது பற்றி தங்கவேல் உடையார் பேசினார்.

* *

வாழ்க்குடையில் திராவிடர் கழக சார்பில் ஒரு பெரிய கூட்டம் காட்டாண்மையாளர் தோழர் கிட்டுக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. எஸ். கே. சாமி வாலிபர் கடமையும் பெரியோர்கள் நிலைமையும் என்பதைப் பற்றி பேசினார். பின்னர் ஆரியர் கொடுமை பற்றி தோழர்கள் ஜெயமணியும்; வி. எல்லப்பன் தற்கால நிலையைப் பற்றியும் பேசினார்கள்.

## திருப்பத்தூர் (வ. ஆ) திராவிடர் கழகம்

22-4-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேல் திருப்பத்தூரில் வடஆற்காடு ஜில்லா திராவிடர் கழகம் ஜில்லா (கழகம்) நிர்வாகஸ்தர்கள் அமைப்புக் கூட்டம் கூட்டப்படுகிறது. அது சமயம் ஜில்லா மாநாடு நடத்தவும் ஆலோசிக்கப்படும். ஆகையால் இதனையே அழைப்பாகக் கொண்டு நமது ஜில்லாவின் பல பாகங்களில் உள்ள திராவிட கழகத்தினர்களும் நமது இயக்க அன்பர்களும் கட்டாயம் வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.


## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 3 அணா புத்தகங்கள்

பெண்ணுரிமையும் மதமும்
இராமாயண பாத்திரங்கள்
இரண்டு வழிகள் (இங்கர்சால்)
சீர்திருத்த மார்க்கம் ( ,, )
மேயோகூற்று மெய்யா பொய்யா?
பேய்-பூதம்-பிசாசு
மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?
மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
நான் சம்சயவாதி ஆனதேன்?
பொதுவுடமைத் தத்துவங்கள்
தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி
மறுப்புக்கு மறுப்பு (சாமி வேதாசல குறிப்பு)

### 6 அணா புத்தகங்கள்

மனிதன் என்றால் என்ன?
கர்ப்ப ஆட்சி
மெஞ்ஞானமுறையும்,
மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.